**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 194/2010**

**PROSECUTION WITNESS NO. 7**

| | | |
|---|---|---|
| **Name** : டாக்டர். ஜேசுதாஸ் | | |
| **Father's/Husband Name :** அந்தோணி குருஸ் | **Occupation** : மருத்துவர் | |
| **Address** : தஞ்சாவூர். | **Age** : **74/2025** | |

**(Accused 1 Died. Accused 2 to 4 absent. Petition U/s. 355 BNSS filed and allowed.)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு, சு, நித்தியகுணாளன், பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**C.C.No. 194/2010 27.01.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்:** 12.29

**முதல் விசாரணை:**

**1,** நான் தற்போது தஞ்சாவூர் அவர்லேடி பல்நோக்கு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நான் தஞ்சாவூர் இராஜா மிரஸ்தாரர் மருத்துவமனையில் உதவி பேராசிரியராக 1987–1999 வரை பணி செய்தேன். அப்போது 1995–1997ல் நான் இந்திய மருத்துவ சங்க தஞ்சாவூர் கிளை செயலாளராக பொறுப்பிலிருந்தபோது இறந்த 1ம் எதிரி துளசிதாசன் என்பவர் போலியாக மாற்று முறை மருத்துவ சிகிச்சை என்ற பெயரில் எலோக்ரோ மெடிக்கல் என மருத்துவக்கல்லூரி நடத்தி வந்தார். அவரும் அந்த காலக்கட்டத்தில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வராக இருந்த திரு. தியாகராஜன் என்பவர் அவர் பெயர் பலகையில் போலியாக Ph.d பட்டம் போட்டப்பட்டிருந்ததை எதிர்த்தும், அந்த பட்டம் 1ம் எதிரியின் துணையுடன் போலியாக பெறப்பட்டது என எதிர்ப்பு தெரிவித்தும், மேலும் 1ம் எதிரியும், திரு. தியாராஜனும் சேர்ந்து தமிழ்பல்கலை கழகத்தில் நடந்தயிருந்த பட்டமளிப்பு விழாவை நடத்த கூடாது எனவும் எதிர்ப்பு தெரிவித்து IMA தலைவர் திரு. மோகன்தாஸ் உடன் சேர்ந்து தமிழ்பல்கலை கழகத்திற்கு கடிதம் அனுப்பினோம்.

2. மேலும், 1ம் எதிரி மற்றும் 4ம் எதிரி திரு. தியாகராஜனும் சேர்ந்து மருத்துவக்கல்லூரியில் வகுப்பு எடுக்க கூடாது எனவும் எதிர்ப்பு தெரிவித்து, இது சம்மந்தமாக இந்திய மருத்துவ கழகத்தின் தலைமைக்கும், போலி மருத்துவ ஒழிப்புக்குழுவிற்கும் தெரிவித்தோம். அவர்களிடமிருந்து எனக்கு 24.04.1997ம் தேதி கடிதம் வந்தது. அந்த கடிதத்தை எங்களது கிளை தலைவரிடம் ஒப்படைத்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனக்கு கிடைத்த பதில் கடிதம் ஆகும். **அந்த ஆவணம் அ.சா. ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 24.04.1997 ம் தேதியன்று எனக்கு போலி மருத்துக்குழு தலைவர் Dr. ஆர்.எம். கிருஷ்ணன் அவர்களிடமிருந்து பதில் கடிதம் பெறப்பட்டு கிளை தலைவருக்கு கொடுத்தேன். அக்கடிதம் எனக்கும், IMA மாநில செயலாராக இருந்த Dr. அஸ்ரப் அவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

3. ஸ்ரீலங்கா யுனிவர்சிட்டியால் வழங்கப்பட்ட Ph.d பட்டம் என இருந்தது. முழு பெயர் ஞாபகமில்லை. WHO மற்றும் இந்திய ஹோமியோபதி கவுன்சில் மற்றும் தமிழ்நாடு எம்.ஜி.ஆர் யுனிவர்சிட்டி அதிலிருந்து பெறப்பட்ட கடிதம் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு அதனடிப்படையில் எங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. 1ம் எதிரி துளசிதாசன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். 1ம் எதிரியால் நடந்தப்பட்ட போலி மருத்துவக்கல்லூரி எங்கு நடத்தி வந்தார் என்றால் சரியான முகவரி தெரியவில்லை. மருத்துவக்கல்லூரி சாலையில் ஓர் இடத்தில் நடத்தி வந்தார். 4ம் எதிரி தியாராஜனின் Ph.d பட்டம் தொடர்பான ஆவணங்கள் எதுவும் நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. என்னால் IMAவிக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை போலீஸ் விசாரணையில் கொடுத்தேனா என்றால் தற்போது நினைவில்லை. WHO மற்றும் இந்திய ஹோமியோபதி கவுன்சில் மற்றும் தமிழ்நாடு எம்.ஜி.ஆர் யுனிவர்சிட்டி கொடுத்த கடிதம் தொடர்பான ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் நான் நேரில் பார்க்கவில்லை. நான் எதிரிகளுக்கு எதிராக தொழில் போட்டியின் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி நற்பவி, 3ம் எதிரி பொற்செழியன் ஆகியோர் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. நான் 1ம் எதிரி தனியாக போலி மருத்துவக்கல்லூரி நடத்தி வந்ததாக சொல்வது குறித்து புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.ஆ. 18ல் 1, 4 எதிரிகளுக்கு எதிராக சட்டபடியான நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 1ம் எதிரி போலியான மருத்துவக்கல்லூரி நடத்தவில்லை என்றாலும், அவர்களுக்கு எதிராக இருந்த அந்த காலகட்டத்தில் 4ம் எதிரி தஞ்சை மருத்துவக்கல்லூரி முதல்வராக இருந்ததன் அடிப்படையில் அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஆவணத்தின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்காமல், கேள்விபட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/−திருமதி.எஸ்.சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்−I,
தஞ்சாவூர்.